# தமிழ் இலக்கியத்தில் மனிதநேய வாழ்வியல் மதிப்புகள்

முனைவர் பொ.மா.பழனிசாமி
முதல்வர்,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

பழங்கால மக்களுக்குப் பூமியே புதிதாகத் தெரிந்தது. இருள் ,வெளிச்சம்,உயர்ந்த மலை, அகன்ற கடல், சூரியன் நிலவு நட்சத்திரங்கள் ,சூறாவளிக்காற்று, பயங்கர மிருகங்கள், போன்றவற்றைப் பற்றிய சரியான புரிதலோடு அவற்றைப் பற்றிய இயற்கை அறிவு மக்களிடம் இருந்தது. அவற்றின். படைப்புப் பற்றி சிந்தித்ததின் விளைவு மக்களிடையே இயற்கைச் சிந்தனை தோன்றியது. இயற்கை தான் கடவுள் உலகமே கடவுள் என்ற சிந்தனை வளர்ந்தது. மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ இயற்கையை வணங்கும் பண்பாட்டு மரபு வழக்கத்திற்கு வந்தது.

தமிழர்களின் வாழ்வு முறை, போர்த்திறன், அரசர்களின் வீரம், அகவாழ்க்கை, புறவாழ்க்கை, புலவர்களின் புலமைத்திறம் போன்றனவற்றை மிக விரிவாகப் பேசுவன சங்க இலக்கியங்களாகும். தமிழர்கள் அகம், புறம் என வாழ்க்கையை இரு கூறாகப் பகுத்துக் கொண்டு நல்ல குடும்பச் சூழலையும் அரசியல் அமைப்பையும் கொண்டு வாழ்க்கையில் உயர்ந்திருந்தனர். ஆனால் இன்றைய சூழலில் நவீனமயமாதல், நகரமயமாதல், தொழில் மயமாதல், மேற்கத்திய மயமாதல் போன்ற காரணங்களால் நாம் காலங்காலமாகப் பின்பற்றி வந்த நல்ல மானுட மதிப்புகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. இம்மாற்றம் பொருளாதார வளர்ச்சியைக் கொடுத்தாலும் தனி மனித சமூக வாழ்வியல் மதிப்புகளைச் சிதைத்து விட்டது எனலாம். அவ்வாறு இழந்த நமது பாரம்பரியமிக்க பண்பாட்டையும் மதிப்பையும் மீட்டெடுக்க வேண்டிய நிலையில் இப்போது நாம் உள்ளோம். இதற்கு நமது முன்னோரின் பழந்தமிழ் இலக்கியங்களின் வழி மானுட மதிப்புகளைக் கண்டறிந்து எடுத்துரைக்க வேண்டிய நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

மனிதநேய மதிப்பு வாய்ந்த சமுதாய விழுமியங்களை மட்டுமே சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் பதிவு செய்துள்ளன. அகம், புறம் என்ற இரு நெறிகள் சார்ந்து சமுதாய மதிப்புகள் சங்க காலத்தில் மதிக்கப் பெற்றுள்ளன.

## அகம் சார்ந்த மதிப்புகள்

தலைவியும் தலைவனும் அன்பு கொள்வது, அன்பு கொண்டவரையே மணப்பது, சுற்றம் ஒத்துக்கொள்ளாத போது உடன்போக்கு மேற்கொள்வது, அகவாழ்க்கையாகத் தொடங்கிய பின்பு பொருளாதார அளவில் ஏற்றம் வந்தாலும், தாழ்வு வந்தாலும் அன்பினை விட்டுவிடாது ஏற்று வாழ்கின்ற அன்பு நிறை வாழ்வே அகநிலையில் மதிப்பு மிக்க வாழ்வாகக் கருதப்பட்டது. செவிலித்தாயும் நற்றாயும் தன் மகள் இனிதாக இல்லறம் நடத்துவதைக் கண்டு பெருமைப்படும் நிகழ்வை,

**அன்னாய் வாழி வேண்டன்னை நம்**
**படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவன்**
**நாட்டு**
**உவலைக் கூவல் கீழ்**
**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே**

(ஐங். 203)

என்ற பாடல் விளக்கக் காணலாம். தலைவி தலைவனுடன் இணைந்து தனிக்குடித்தனம்

கொண்டு வாழ்கிறாள். அங்கு பொருளாதாரப் பற்றாக்குறை உண்டு. ஏனெனில் தலைவியின் பிறந்தவீடு செல்வச் செழிப்பானது. தலைவி தேனும் பாலும் தந்து வளர்க்கப் பெற்றவள். ஆனால் தலைவனின் வீட்டில் தண்ணீரை மட்டும் உணவாகக் கொண்டு பிறந்த வீட்டில் ஏதும் பெறாமல் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து காட்டுகிறாள் தலைவி. எனவே இல்லற மதிப்பு இங்கு உயர்ந்து நிற்கக் காணலாம்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

என்ற வள்ளுவரின் வாக்கு இங்கு நிறைவேறக் காணலாம். கலித்தொகையில் ஒரு தலைவன்,

**ஒன்றன் கூறாடை உடுப்பாரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை**
(கலித். 18)

என மனம் ஒன்றி வாழும் வாழ்க்கையைப் பெரிதென மதித்து வாழ்கிறான் என இப்பாடல் விளக்குகின்றது. அணிந்து கொள்வதற்கு ஒரே ஆடை இருக்க அதனை ஒரு பகுதியைத் தலைவனும், மற்றொரு பகுதியைத் தலைவியும் அணிந்து கொள்ளும் வறுமைச் சூழல் வந்தபோதும் மனம் கலந்த வாழ்க்கையே இனிமையானது என்ற ஒத்திசைவு மதிப்பு இங்கு உயர்ந்து நிற்கின்றது.

**இயற்கையும் மானுட மதிப்பும்**

தலைவியை அரவணைத்து அன்பை நல்கும் தலைவனுக்கு தோழி இயற்கையுடன் கூடிய மானுட மதிப்பை இவ்வாறு வெளிப்படுகின்றாள். 'நாங்கள் எங்கள் தோழியரோடு சென்று ஒரு நாள் புன்னை விதையை வெள்ளிய மணலுடன் அழுத்தி விளையாடிய பின் அதனை மறந்து போனோம். பின்பு அவ்விதை வேரூன்றி முளைத்து நின்றது. அதனைக் கண்டு மகிழ்ந்த நாங்கள் நெய்யோடு கலந்த இனிய பாலை நீராக ஊற்றி இனிதாக வளர்த்தோம். வளர்த்த அச்செயல் கண்டு அன்னை எங்களை நோக்கி, நீங்கள் வளர்க்கும் இப்புன்னை மரம் உங்களைவிடச் சிறந்ததாகும். அது உங்களோடு பிறந்த சகோதரியாகும் தகுதியுடையது காண்மின்' என அப்புன்னையின் பெருமை கூறினாள் அன்னை. எனவே அப்புன்னை எமது சகோதரியாகும் அப்புன்னை அருகில் தலைவனாகிய உன்னோடு நகைத்து விளையாடி மகிழ தலைவி நாணுகின்றாள். நீ தலைவியை அரவணைத்து நல்குவையாயின் இவருடன் உரையாடுவதற்கு அமைந்த இம்மரத்தின் நிழல் போன்று பிற மரங்களும் இங்குள்ளன காண்பாயாக எனத் தோழி தலைவனுக்குக் கூறுகின்றாள். இதனை,

**விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முனை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்- என்று அன்னை கூறினள்**
**புன்னையது நலனே அம்ம நாணுதல் நும்மொடு நகையே**
**துறை கெழு கொண்க! நீ நல்கின்**
**இறைபடு நீழல் பிறவுமார் உளவே**
(நற். 172)

என இயற்கையையும் மதிக்கும் மதிப்பினைச் சங்க மக்கள் கொண்டிருந்தனர் எனலாம்.

**பிற உயிர்களை மதித்தல்:**

தமிழர்கள் பிற உயிர்களைக் குறிப்பாக சக மனிதர்களை மிகவும் நேசித்தனர். இதனை,

**உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்**

**துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சி**
**புகழெனின் உயிரும் கொடுக்குவர்;**
**பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்;**
**அயர்விலர்**

(புறம். 112)

என்ற பாடல்வழி உணர முடிகின்றது.

**நன்றி என்ற உயர் மதிப்பு**

நன்றி மறப்பது மனிதத் தன்மையல்ல. சக மனிதர்களின் உதவியின்றி ஒரு தனி மனிதன் மட்டும் வெற்றியடைய முடியாது. இதனை,

**ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத்**
**தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்**
**வழுவாய் மருங்கில் கழுவாயும் உள என**
**நிலம்புடைபெயர்வது ஆயினும் ஒருவன்**
**செய்தி கொன்றார்க்கு உய்தி இல் என**
**அறம் பாடிற்றே ஆயிழை கிழவ**

(புறம். 34)

என்ற பாடல் உணர்த்துகின்றது. செய் நன்றி மறத்தல் என்பது மிகக் கொடுமையானது என்பது இதனால் புலப்படக் காணலாம்.

**வறுமையிலும் செம்மை மதிப்பு**

அக்காலக் கவிஞர்கள் தம் வறுமை நீங்க அரசர்களை நாடிச் சென்று பாடிச் பரிசுகள் பெற்று வருவர். அவ்வாறு பெற்ற பரிசுகளைத் தான் மட்டும் வைத்து உண்ணாது, சுயநலத்திற்காக வைத்துக் கொள்ளாது, தம்மைப் போன்று வறுமையில் வாழும் எல்லோருக்கும் கொடுத்துப் பிறர் நலம் நாடும் மதிப்பு அதிகம் காணப்பட்டது. இதனை,

**நின் நயந்து உறைநர்க்கும் நீ நயந்து**
**உறைநர்க்கும்**
**பன் மாண் கற்பின் நின் கிளை**
**முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழ நின்**
**நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும்**
**இன்னோர்க்கும் என்னாது என்னொடும்**
**சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனை**
**கிழவோயே**

(புறம். 163)

என்ற பாடல்வழி அறியலாம். பெருஞ்சித்திரனார் என்ற ஏழைக் கவிஞர் தம் மனைவியிடம் கூறும் அறிவுரை வெறும் அறிவுரை அல்ல. பிறரிடம் கொண்ட கருணையும் மனைவியிடம் கொண்ட நம்பிக்கையும் இவ்விடத்தில் மானுட மதிப்புகளாக பரிணாமம் பெறுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியங்களில் மதிப்பு சார்ந்த செய்திகளை பரக்கக் காணலாம்.

**அறநூல்களின் மதிப்பு**

அறநூல்கள் பதினொன்றாகும் . அவை எவையெனில் நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகியனவாகும்.

**நாலடியார்**

சமண முனிவர்களால் எழுதப்பபட்ட 400 பாடல்களைக் கெபண்ட தொகுப்பு நூல்.

இது அறம் பொருள் இன்பம் என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இந்நூல் மானுட வாழ்விபலை மிகத்தெளிவாக விளக்குகின்றது. ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் சிறப்பாக வாழ அடிப்படை அறிவோடு கூடுதல் அறிவைப்பெற கல்வி கற்றல் மிக இன்றியமையாதது.

இதனை

**கல்வி கரையில கற்பவர் நாள் சில**
**மெல்ல நினைக்கின் பிணி பல தெள்ளிதின்**
**ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர் ஒழிய**
**பாலுண் டுருகின் தெரிந்து....**

என்ற பாடல் எடுத்துரைகின்றது. இங்கு கற்றல் மதிப்பு உயர்ந்து நிற்கின்றது.

கல்வியிற் சிறந்த கண்டுபிடிப்பாளன் , ஆராய்ச்சியாளன், சிந்தனையாளன் . இவர்களின் செயல்பாடுகளைக் பொறுத்தே உலகத்தில் முன்னேற்றம் பெறுகின்றது 'இளமையில்' கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன் எதிர்கால வாழ்விலும் இறந்தவன் யூரிபிடிஸ் அவர்களின் கருத்து அவ்விடத்தில் எண்ணிப் பார்க்கத் தக்கது.

ஒருவரின் வாய்ச்சொல் அடுத்தவர் மனதைப் புண்படுத்தாமல் இருத்தல் சாலச் சிறந்த பண்பாட்டு மதிப்பாகும் .இதனை,

**காவாது ஒருவன் தன் வாய்த்திறந்து**
**சொல்லும் சொல்**
**ஓவாதே தன்னைச் சுடுதலால் -**
**ஓவாதே**
**ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார்**
**எஞ்ஞான்றும்**
**காய்ந்தமைந்த சொல்லார் கருத்து.**

என்ற பாடல் வழி அறியலாம்.

ஒருவருக்கு ஆக்கமும் கேடும் அவர் சொல்கின்ற சொல்லால் வருதலால் அவர் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ளல் மனித வாழ்வியலில் ஓர் அம்சமாகும்.

**நான்மணிக்கடிகை :**

விளம்பி நாகனார் எழுதிய 106 பாடல்களைக் கொண்ட இந்நூல் நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற தோல்வளை போல் நான்கு நீதிகளை விளக்குவது போல் அமைந்துள்ளன.

இந்நூலில் மானுட சமுதாயத்தை உயர்த்தும் நற்கருத்துக்கள் நிரம்ப உள்ளன. சான்றாக

**மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்** (20)
**மனைக்குப் பாழ் வாழ் நுதலின்மை** (22)
**எள்ளற்க என்றும் எளியார் என்று** (3)
**ஈத்துண்பான் என்பான் இடை நடுவான்**(62)
**மடிமை கெழுவார் கண் நிற்கும்**(90)

போன்ற பாடற் செய்திகளைக் கூறலாம் இல்லறம் நல்லறமாக மாண்படைய மகளிரே காரணமாம் ஒவ்வொரு மனிதனும் சில பண்புகளில் உயர்ந்தும் சில பண்புகளில் குறைந்தும் இருக்கலாம். அதனால் சூழ்நிலை புரியாமல் ஒருவனை எள்ளி நகையாடுதல் கூடாது. அதனால் உறவும் நட்பும் பாழ்படும். தன் தேவையும் பிறர் தேவையும் அறிந்து ஒருவருக்கொருவர் தக்க நேரத்தில் உதவி வாழ்வது நல்லது. அதே நேரத்தில் சோம்பல் தன்மை ஒருவனை வளரவிடாமல் தடுத்துவடும் என்பதை அறிந்து உரிய மதிப்பை வழங்கி வாழப் பழக வேண்டும்.

**இன்னா நாற்பது**

மனித சமூகம் பயன்படுத்தக் கூடாதவற்றைக் கூறும் 40 பாடல்கள் அடங்கியது. இந்நூலில் மானுட சமூகம் எவற்றையெல்லாம் தவிர்த்து வாழ வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியைத் தரக்கூடிய கருத்துக்கள் நிறைந்துள்ளன. மளித வாழ்வியலில் காணப்படும் துன்பங்களின் மூலங்கள் எவை என்பதை எடுத்துக்காட்டுவனவாக இதன் பாடல்கள் அமைந்துள்ளன. உறவினர்களும் நண்பர்களும் நிறைந்த கூட்டத்தோடு வாழ்வது நம்பிக்கையையும் பாதுகாப்பையும் தருவதாகும். இதனை 'பந்தமில்லா மனையின் வனப்பின்னா'(1) என்ற பாடல் வரி இயம்புகின்றது. தேவைக்கு அதிகமான பயன்பாடு குறைவாகவுள்ள பெரும்பொருளைச் சேமித்து வைப்பது பெருந்துன்பத்தைத் தரும் என்பதை ,

'உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா'(16)என்ற பாடலும் எதையும் சாதிக்கும் வல்லமை மிகுந்த திண்ணிய அறிவுடையவனின் மனம் ஏதாவதொரு காரணத்தால் சோர்வடைந்து இருத்தல் அது சமுதாயத்திற்கு மிகுந்த துன்பத்தைத் தரும் என்பதனை ,

'உரனுடையானுள்ளம் மடிந்திருத்தல் இன்னா'(18) என்ற பாடல் வரியும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இங்கு முயற்சி என்ற மதிப்பு வலியுறுத்தப்படுகின்றது.

எனவே மானுட வாழ்வின் பதிவுகளாக விளங்கும் பதினெண்கீழ்க்கணக்கு நீதி இலக்கியங்களில் மானுட விழுமியங்கள் நிறைந்து காணப்படுகின்றன. வாழ்நிலைக்கேற்ற உயர்நிலைப் பண்பாட்டினையும் நற்பண்புகளையும் , சிந்தனைகளையும் இல்லறம் சார்ந்த இனிய வழக்கங்களையும் கீழ்க்கணக்கு நூல்களில் காண முடிகின்றன. சமூகத்தில் ஒரு மனிதன் முழு மனிதனாக வாழ எல்லா வகையிலும் இவ் இலக்கியங்கள் வழிகாட்டி நிற்கின்றன.

## முடிவுரை

நாடு என்றால் அது மக்களால்தான் பெயர் பெற முடியும். மக்கள் மகிழ்ச்சியாக இருந்தால்தான் சமூகத்தில் மானுட மதிப்புகள் வளரும். தன்னைப் போல பிறரும் சிறப்புப் பெற வேண்டும் என்பதில்தான் மானுட மதிப்புப் பயன்படுத்தப்படுகின்றது. தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்கிற பண்பு, வறுமையிலும் செம்மை, நடுவுநிலைமை, பதவி உயர்ந்தாலும் எளிமையாக இருத்தல், ஒருவர்மேல் ஒருவர் காட்டும் அன்பு, பிற உயிர்களின் மேல் இரக்கம், பொது நலப் பண்பு போன்ற மானுட மதிப்பு சார்ந்த பண்புகள் தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். எனவே தமிழ் இலக்கியம் மானுட மதிப்பை உயர்த்தும் இலக்கியம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.